REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ★ ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

[மலர் 5] சென்னை: ஐப்பசி 1உ வியாழன் (17—10—57) ★ ★ வெளியூர்: ஐப்பசி 2உ வெள்ளி (18—10—57) [இதழ் 107

சென்னை சட்டசபை: அக். 25-ல் கூடுகிறது

★

சென்னை, அக். 17—

சென்னை மாநில சட்டசபை (அசெம்பிளி)யின் கூட்டம் இத்திங்கள் 25-ந்நாள் கூடுகிறது; கூட்டம் தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும்.

இக்கூட்டத் தொடரில் மாவட்ட ஆட்சிமன்ற (திருத்த) மசோதாவும், கால்நடை மருத்துவர் பதிவு மசோதாவும் முறையே, அமைச்சர்கள் லூர்து அம்மையார், பக்தவத்சலம் ஆகியோரால் கொண்டு வரப்படும்.

'இந்தி பெரும்பாலான மக்களால் பேசப்படும் மொழியா?'

'பதினேரு வகை இந்தி மொழிகள் இருக்கின்றனவே?'

'இந்தி பேசாத மக்கள் தொகை கணக்கு என்ன?'

இந்தி ஆதிக்கத்திற்கு வால்பிடிப்போரின் வாதங்களை அலசுகிருர் பொதுச்செயலாளர்

சென்னை-தாம்பரம் கிருத்துவக் கல்லூரி மாணவரிடை முழக்கம்

சென்னை, அக். 17—

நேற்று மாலை 5½-மணிக்கு சென்னை-தாம்பரம் கிருத்துவக் கல்லூரி தமிழ்ப் பேரவையின் சார்பில் நடந்த கூட்டத்தில், 'மொழிப் பிரச்சினை' என்ற தலைப்பில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய உரை இங்கு தரப்படுகிறது:—

"இந்தி புகுத்தப்படுவதற்குச் சொல்லப்படும் ஒரே காரணம் என்னவென்ருல், 'அது பெரும்பாலான மக்களால் பேசப்படுகின்ற மொழி'—அதற்கு இருக்கிற ஒரே ஒரு தகுதி, 'பெரும்பாலான மக்களால் பேசப்படுகின்றது'—என்ற தகுதிதான்.

"வங்காளியைவிட, குஜராத்தியைவிட, மாராட்டியத்தைவிட, தமிழைவிட, தெலுங்கைவிட, கன்னடத்தைவிட, மலையாளத்தைவிட இந்தி, இலக்கண வளம் மிகுந்ததா?—இலக்கிய வளம் மிகுந்ததா?—கலைச் சொற்கள் மிகுந்ததா?—பழமை பொருந்தியதா?—உயர் தனிச் செம்மொழியா?—அல்லது ஆயிரம் ஆண்டுக் கால பெருமையுடையதா? அதுவும் இல்லை! எந்த ஒரு நிலையை வைத்துப் பார்த்தாலுங்கூட, இந்திக்குக் கொடுக்கப்படுகின்ற, 'மற்றைய மொழிகளுக்கில்லாத சிறப்பு என்ன?'—என்ன என்று கேட்டால், அதற்குச் சொல்லுகின்ற ஒரே ஒரு காரணம், 'பெரும்பாலான மக்களால் பேசப்படுகிறது; பெரும்பாலான மக்களால் பேசப்பட்ட காரணத்தாலே மற்றைய மக்களும் பேசத் தெரிந்துகொள்ளலாம்' என்ற முறையிலே, இந்தியைப் புகுத்துபவர்கள் சொல்லுகின்ற காரணத்தில் அது ஒன்று.

"இப்பொழுது அரசியல்வாதிகளும், மற்றவர்களும் சொல்லுகின்ற இரண்டாவது காரணம் என்னவென்ருல், 'அது அரசியல் நிர்ணயச் சட்டத்திலே ஒப்புக்கொள்ளப்பட்ட மொழியாக ஆகிவிட்டது; எப்பொழுது அரசியல் நிர்ணயச் சட்டத்திலே—1950-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 26-ம் நாள் ஒப்புக்கொண்டுவிட்டார்களோ, அதனுல் இந்த உலகம் சென்றுமுடியும் காலம்வரையில் அதை யாரும் ஆட்டவோ—அசைக்கவோ முடியாது'—என்ற காரணத்தைக்காட்டி, 'ஆகவே, இந்தியத் துணைக்கண்டத்திலே அதை ஆட்சி மொழியாகவும்—பொது மொழியாகவும்—அரசியல் மொழியாகவும் ஆக்கியே தீருவோம்' என்று கூறுகிருர்கள்.

"முதல் கூற்றை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும்; 'இந்தியாவில் பெரும்பாலான மக்களால் இந்தி பேசப்படுகின்றது'—என்று சொல்லப்படுகின்ற ஒரு கூற்றை நீங்கள் பார்ப்பீர்களே யானுல், உண்மை தெரியும். பெரும்பாலான பாமர மக்களும்—அறியாத மக்களும்—மொழியின் தன்மை தெரியாத மக்களும்—இந்தியாவினுடைய நிலைமை புரியாத மக்களும் நினைத்துக்கொண்டிருக்கிருர்கள்—'இது 60 பங்கு, 70 பங்கு மக்களால் பேசப்படும் ஒரு மொழி போலும்! மற்ற மொழிகள் எல்லாம் சேர்ந்து 30 பங்கு 35 பங்குதான் பேசுகிருர்கள் போலும்! எனவே, 60—70 பங்கு பேசப்படுகின்ற அத்தகைய மொழியை நாமும் பேசத்தானே தீரவேண்டும்'—என்று நினைக்கிருர்கள். அதை நாம் முதலிலே உணர்ந்துகொள்ளுதல் வேண்டும். இந்தியத் துணைக்கண்டத்தின் 36 கோடி மக்களில் பெரும்பாலான மக்களால் பேசப்படுகின்ற மொழியா இன்றைக்கு நம்மிடத்திலே திணிக்கப்படுகின்ற மொழி என்று கேட்டால் இல்லை. அதனுடைய உள்ருட்சமத்தைத்தான் நீங்கள் நன்ருக அறிந்துகொள்ளவேண்டும்.

"இந்த நாட்டினுடைய அரசியல் மொழியாக இதை வைத்துத்தான் தீரவேண்டும்; 1965-ம் ஆண்டு முதல் இது எல்லாத் துறைகளிலும் ஆட்சிமொழியாக ஆகிவிடவேண்டும்; அதற்குள்ளாக ஆங்கிலம் பெற்றிருக்கும் இடத்தை இது பெற்றுவிடவேண்டும்; பெறமுடியாவிட்டாலும் பெற்றுத்தீருவதற்கான வழிவகைகளைச் செய்து தீரவேண்டும்—என்ற முறைக்கு அவர்கள் விதி போட்டு, அதற்கான குழு ஒன்று அமைத்து, இது ஏற்ற தருணம்தானு என்று ஆராய்ந்து பார்த்து, 1965-ம் ஆண்டு முதலே அதை ஆட்சிமொழியாகப் புகுத்திவிடலாம் என்பதற்கு குழுவினர் அறிக்கை வெளியிட்டார்களே அந்த அறிக்கைப் புத்தகம்தான் இது—(பொதுச்செயலாளர் அவர்கள் மாணவர்களிடம் 'மொழிக் குழுவின் அறிக்கை' நூலைக் காட்டினுர்கள்)-தலைமை மாதிரி! இந்த அறிக்கைப் புத்தகத்திலேயே அவர்கள் சொல்லியிருக்கின்ற அத்தகைய மொழி, இந்தியாவில் எத்தனை மக்களால் பேசப்படுகிறது என்பதை, இந்த மொழிக் குழுவினர் கூறியிருக்கின்ற கணக்கின்படியே பார்த்தாலும்கூட உணர்ந்துகொள்ளலாம்—இது பெரும்பாலான மக்களால் பேசப்படுகிற மொழியா சிறுபான்மையோரால் பேசப்படுகிற மொழியா என்பதை!

"இந்த அறிக்கைப் புத்தகத்தில், இந்தியத் துணைக் கண்டத்தில்இருக்கின்ற14மொழிகளைப் பேசுகின்ற மக்கள் எத்தனைப் பேர் என்ற புள்ளி விவரக் கணக்கை 28-வது பக்கத்தில் கொடுத்திருக்கிறுர்கள்; அதிலே, இந்தி, உருது, இந்துஸ்தானி, பஞ்

(4-ம் பக்கம் பார்க்க)

இந்தி எதிர்ப்பு அணியில் மாணவர்கள்

சேலம் கல்லூரியில் வேலை நிறுத்தம்

சேலம், அக். 15—

'இந்தியைப் புகுத்தாதே' என்று கண்டித்து சேலம் கல்லூரியைச் சேர்ந்த சுமார் 560 மாணவர்கள் இன்று (15-ந் தேதி) ஆர்ப்பாட்டம் செய்து ஊர்வலமாக சேலம் நகரின் முக்கிய வீதிகள் வழியே சென்றனர்.

சேலம் நகராண்மைக் கழகக் கல்லூரியைச் சேர்ந்த இந்த 500 மாணவர்களும், 'இந்தியைத் திணிக்கிருர்களே,-அய்யய்யோ!' 'இந்தியைத் தேசிய மொழியாக்குகிருர்களே,-அய்யய்யோ!' என பன போன்ற முழக்கங்களை விண்ணதிர முழக்கிக்கொண்டு நகரின் முக்கிய வழியாகச் சென்றனர்.

'அய்யய்யோ' என்பது போன்ற ஒலிகள் மக்களின் மனதைக் கவர்ந்தன; இதுவரை யாரும்,

(4-ம் பக்கம் பார்க்க)

இன்றே ஆங்கிலத்தின் இடத்தில் இந்தியை அமர்த்த வேண்டுமாம்!

ஆங்கிலத்தை அடியோடு ஒழித்துக்கட்ட வேண்டுமாம்!

லோகியா தலைமையில் உ. பி. சோஷலிஸ்டுகள் வெறிக் கூச்சல்

அலகாபாத், அக். 15—

டெல்லி சர்க்கார் தனது நிர்வாகக் காரியங்களுக்கு ஆங்கிலத்தை உபயோகிப்பதைக் கைவிட்டுவிடவேண்டும் என்றும், இன்றே இந்தியில் நிர்வாகத்தை நடத்தவேண்டும் என்றும் உ. பி. சோஷலிஸ்டுகள் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றனராம்!

கட்சி மாநாடு ஒன்றில் அந்தக் கட்சியின் மிகப் பெரிய தலைவர் டாக்டர் லோகியா, இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்து முன்மொழிந்தாராம், தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாம்!

அதுமட்டுமல்ல; சர்க்கார் அலுவலகங்களில் ஆங்கில ரப்பர் ஸ்டாம்புகள் உபயோகிப்பதையும் உடனடியாக நிறுத்துவதுடன், ஆங்கிலச் செய்தித் தாள்களுக்கு விளம்பரம் தருவதையும் நிறுத்தவேண்டும் என்றும் லோகியா சோஷலிஸ்டுகள் கோருகின்றனராம்!

"வர்த்தகர்கள், தங்களின் கடைப் பெயர்ப் பலகைகளில் ஆங்கிலத்தை உபயோகிப்பதற்கு மாருக, உடனே இந்தியில் தங்களின் பெயர்களை எழுதவேண்டும்"

என்றும் கோரி தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றனராம்!

மேலும், ஆங்கிலப் பத்திரிகைகளைப் படிக்க வேண்டாம் என்று மக்களைக் கேட்டுக்கொள்வதாயும் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றனராம், லோகியா சோஷலிஸ்டுகள்!

இந்தி மட்டுமே இந்தியாவின் 'தேசிய மொழி'யாம்!

அ. இ. கம்யூனிஸ்டுகளின் முடிந்த முடிபு

இந்திதான்—இந்தி மட்டுமேதான் இந்தியாவின் தேசிய மொழியாக இருக்க முடியுமாம்! ஏனெனில், அதுதான் பெரும்பாலான மக்களால் பேசப்படுகிறதாம்!

இது, அகில இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் முடிந்த முடிபு.

இந்த முடிவை, அந்தக் கட்சியின் மத்திய செயற்குழு நேற்று இங்கு வெளியிட்டிருக்கிறது.

மேலும் அந்தச் செயற்குழு, இந்தியைப் படிப்படியாகத் திணிப்பது எப்படி என்று ஒன்பது அம்சத் திட்டம் ஒன்றையும் வெளியிட்டிருக்கிறது.

'ஆங்கிலத்திற்குப் பதில் இந்தி வேண்டுமா, வேண்டாமா?'

'இந்தக் கேள்விக்குப்பதில் தரவேண்டியவர்கள் இந்தி பேசாத மக்களேயாவர்'

சி. பி. இராமசாமி ஐயர், மற்றும் பலர் அறிக்கை

பெங்களூர், அக். 16—

ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்தியை வைத்துக்கொள்வதா, வேண்டாமா? இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டியவர்கள் யார்?

இப்படிக் கேட்டிருக்கின்றனர், டாக்டர் சி. பி. இராமசாமி அய்யர் உட்பட்ட பன்னிரண்டு தலைவர்கள்!

'ஆங்கிலத்திற்குப் பதில் இந்தியை வைத்துக்கொள்வதா வேண்டாமா என்பதை இந்தி மொழி பேசாத மக்கள்தான் முடிவு செய்யவேண்டும்' என்று, டாக்டர் சி. பி. இராமசாமி அய்யர், மிர்ஜா எம். இஸ்மாயில், பி. கோதண்டராவ் முதலிய பன்னிரண்டு தலைவர்கள் கையொப்பமிட்டு இங்கிருந்து ஒரு அறிக்கை விடுத்துள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 17—10—'57 வியாழன்

சென்னையின் திண்டாட்டம்!

தமிழக மக்களின் மூல உணவாக இருந்துவருவது அரிசி. இருந்தாலும், அம்மூல உணவுப் பொருளில் தன்னிறைவு அடைய முடியாமல் தமிழகம் தவித்துக்கொண்டிருப்பது வியப்புக்குரியது.

தமிழக மக்கள் அனைவருக்கும் உணவுப் பொருளை வழங்கித் தீரவேண்டிய கட்டாயம் சென்னை அரசாங்கத்திற்கு இருக்கிறது. அப்படி வழங்கப்படும் உணவுப் பொருளும் மக்களின் வாங்கும் சக்திக்கொப்ப விலை மலிவாக வழங்கித் தீரவேண்டிய கடமை சென்னை அரசாங்கத்திற்கு உண்டு.

சென்னை அரசாங்கத்தின் மீது மிகைப்பட்ட ஆதிக்கம் செலுத்திவருவது இந்தியப் பேரரசாகும். எனவே, சென்னை மக்களின் உணவு நெருக்கடியை, போதிய அரிசியைத் தந்துதவுவதின் மூலம் தவிர்க்க வேண்டிய பொறுப்பு, சட்டப்படி இந்தியப் பேரரசிற்கு இருந்துவருகிறது.

சென்னை மக்களின் அரிசிப் பற்றுக்குறையைக் களைய வேண்டிய கடமையை சட்டப்படி பெற்றுள்ள இந்தியப் பேரரசு, தம்மிச்சையாக வலிய முன்வந்து தமிழ் மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமையை ஒழுங்காக நிறைவேற்றி வைக்கவேண்டும். அதுபோன்றே, இத்துறையில் இந்தியப் பேரரசிற்குள்ள கடமையை அடிக்கடி எடுத்துக்காட்டி இடித்துக்கூறி, தேவையான அளவு அரிசியைத் தனது மக்களுக்குப் பெற்றுத் தரவேண்டியது சென்னை அரசாங்கத்தின் நீங்காக் கடமையாகும்.

ஆனல் இரண்டு அரசாங்கங்களும், தமிழக மக்களுக்குத் தாம் ஆற்றித் தீரவேண்டிய கடமை உணர்வு கொண்டவைகளாக இல்லை. மாற்றுக் கட்சிகளிடமிருந்து கண்டனக் குரல்கள்—அதிலும் பரவலாகவும் உரத்தும்—கிளம்பினல் அல்லாது இரண்டு அரசாங்கங்களும், தமது பொறுப்பை உணர்ந்து செயல்பட முந்துவதாக இல்லை.

அறுவடைக் காலங்களில் அரிசி விலை கொஞ்சம் குறைவதும், மற்றக் காலங்களில் சராசரி மக்களால் வாங்க முடியாத நிலையில் விலை உயர்வதும் இங்கு வழக்கில் இருந்துவருகிறது. எக்காலத்திலும் குறைந்த விலையில் அரிசி கிடைப்பதற்குரிய நிலையான ஏற்பாட்டைச் செய்ய வேண்டிய சென்னை அரசாங்கமோ, அறுவடைக் காலங்களில் அரிசி விலை குறைந்துவிடும்—வியாபாரிகளின் இலாப ஆசையினலேயே அரிசியின் விலை ஏறியிருக்கின்றது—அதைத் தடுக்க தீவிர நடவடிக்கை எடுக்கப் போகிறோம்—என்று கூறிக் கூறி, இந்தப் பத்தாண்டுக்காலமாகக் காலங்கழித்துவருகின்றது. தமிழ் மக்களின் அரிசித் திண்டாட்டமும் நிரந்தர வேதனையாகிவிட்டது.

இந்தச் சூழ்நிலையில், தென்னக உணவு மண்டலம் என்ற ஒரு ஏற்பாட்டை இந்தியப் பேரசு நிறுவியது. இம்மண்டலத்தில் இடம் பெற்றுள்ள ஆந்திர மாநிலத்திலிருந்து, அதன் தேவைக்கு மிஞ்சும் அரிசியை, மண்டலத்தில் இடம் பெற்றுள்ள மைசூர், தமிழகம், கேரளம் ஆகிய மூன்று மாநிலங்களுக்கும் அளிக்கப்படும் எனக் கூறியதுடன், ஆந்திராவிலிருந்து வடநாட்டிற்கு வழக்கம்போல் அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டு வந்ததும் தடுக்கப்படும் என்று இந்தியப் பேரசு வாக்களித்தது.

ஆனல் வாக்களித்தபடி இந்தியப் பேரசு நடந்துகொள்ளவில்லை. ஆந்திர அரிசியை தானே கொள்முதல் செய்து, வடநாட்டிற்கு ஏற்றுமதிசெய்ய இந்தியப் பேரசு முனைந்துவிட்டது.

இதன் விளைவாக, தென்னக உணவு மண்டலம் நிறுவினது கண்டு தமிழக மக்களில் சிலருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியும், நம்பிக்கையும் நாசமாகிவிட்டன. தென்னக உணவு மண்டல அமைப்பும், அதுபற்றி இந்தியப் பேரசு தந்த விளக்கமும், அத்துறையில் அதே அரசு அளித்த வாக்குறுதியும், வெறும் ஏமாற்றுவித்தை என்ற உண்மையைத் தமிழக மக்கள் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாயினர். நிற்க.

தென்னக உணவு மண்டலத்தை உருவாக்கிய இந்தியப் பேரசு, அரிசி வழங்குவதில் கேரளத்தையும், தமிழகத்தையும் ஒத்தநிலையில் நடத்தத் தயாராக இல்லை. கேரளத்திற்கு ஒரு போக்கையும், தமிழகத்திற்கு வேறு ஒரு போக்கையும் இந்தியப் பேரசு கையாள முன்வந்தது.

செப்டம்பர் முதல் கொண்டு மூன்று மாதங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 12,000 டன் விதம் கேரளத்திற்கு அரிசி வழங்குவது என்றும், டிசம்பர் மாதத்திற்கு 14,000 டன் அரிசி வழங்குவது என்றும் இந்தியப் பேரசு தீர்மானித்தது. ஆனல் அதே நேரத்தில், சென்னைக்கு அக்டோபர் முதல் மாதம் ஒன்றுக்கு 4,000 டன் விதம் அரிசி வழங்குவது என இந்தியப் பேரசு முடிவு கட்டியது.

இப்படி கேரளத்திற்கு அதிக அளவு அரிசி வழங்குவதும் தமிழகத்திற்குக் குறைந்த அளவு அரிசி வழங்குவதும், அதனதன் தேவையின் அளவைப் பொறுத்த ஒன்றாக இருக்கக்கூடும். ஆனல், தமிழகத்திற்கு இந்தியப் பேரசால் வழங்க ஒப்புக்கொள்ளப் பட்டுள்ள அரிசியின் அளவு, தமிழகத்தின் நியாயமான தேவையை ஈடுகட்டுவதாக இல்லை என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

அரிசி விலை ஏறி விற்கப்பட்ட நேரத்தில், தமிழகத்தில் சென்னை அரசாங்கத்தால் திறக்கப்பட்ட நியாயவிலைக் கடைகளின் எண்ணிக்கையே ஆயிரம் தான். ஆயிரம் கடைகள் மிக மிகக் குறைவானது என்பது சொல்லாமலே விளங்கும். அந்த ஆயிரம் நியாய விலைக் கடைகளையும சரிபாதியாகக் குறைத்துக் கொள்ளவேண்டிய கட்டாயம், தன்னுல் வழங்கக் கூடிய அரிசியின் அளவை இந்தியப் பேரசு குறைக்க முன்வந்ததின் காரணமாகவே சென்னை அரசாங்கத்திற்கு ஏற்பட்டது என்பது தெளிவு.

வழங்குவதாக ஒப்புக்கொண்டுள்ள இந்தக் குறைந்த அளவு அரிசியையும் கொடுத்துதவ, முதற்கண் இந்தியப் பேரசு தயாராக இல்லை. ஒரு மணி அரிசியும் தர முடியாது என்று முதலில் இந்தியப் பேரசு பிடிவாதமாகக் கூறியது. அப்பொழுது, நியாய விலைக் கடைகள் அனைத்தையுமே மூடிவிடத்தான் வேண்டும்-வேறு வழியே இல்லை என்றும் சென்னை அரசாங்கம் கதறியதையும் இதுசமயம் நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

இந்தியப் பேரசால் வழங்கப்படும் அரிசியின் அளவு, தமிழக மக்களின் தேவைக்கும் மிகக் குறைவானதாக இருப்பது ஒருபக்கம் இருக்க, அப்படி வழங்கப்படும் குறைந்த அளவு அரிசியையும், புது அறுவடையின்போது அரிசியாகத் திருப்பிக்தர வேண்டும் என்ற நிபந்தனையின்மீதே தரப்பட்டு இருக்கிறது. விலை குறைவு அல்லது ஏற்றம் ஆகியவற்றின் விளைவாக ஏற்படக்கூடிய இலாப—நட்டத்தையும் சென்னை அரசாங்கமே ஒப்புக்கொள்ளவேண்டும் என்பதும், இந்தக் குறைந்த அளவு அரிசிக்கு இந்தியப் பேரசால் விதிக்கப்பட்டிருக்கும் மற்ரொரு நிபந்தனையாகும்.

கேரளத்திற்கு இந்த இருநிபந்தனைகளும் கிடையாது என்பதுடன், இந்தியப் பேரசால் கொடுக்கப்படும் அரிசியும் இனமாகத் தரப்படுகிறது என்றும் தெரியவருகிறது. ஆனல் தமிழகத்திற்குத் தரப்படும் குறைந்த அளவு அரிசியும், அரிசியாகத் திருப்பித் தர வேண்டும் என்ற நிபந்தனையுடன் கூடிய கடனாகத் தரப்படுகிறது. ஏன் இந்த முறை மாற்றம்?

ஜிப்ரால்டர் யாருடைய சொத்து?

தங்களுடையதென ஸ்பெயின் கோரிக்கை

நியூயார்க், அக். 14—

ஜிப்ரால்டர் தங்களுக்கே சொந்தமானது என்று உரிமை கொண்டாடுவதற்காக ஸ்பெயின், ஐ. நா. சபைக்குச் சென்றிருப்பதாகத் தெரியவருகிறது.

இதை அறிந்த பிரிட்டிஷ் தூதுவர், ஜிப்ரால்டர் தங்களுக்கே உரியது என்பதை வற்புறுத்தியிருக்கிருராம்!

சைப்ரஸ்: துருக்கிக்குச் சொந்தமானதாம்!

குடிரசுத் தலைவரின் விசித்திரப் பேச்சு

இஸ்தான்புல், அக். 14—

"சைப்ரஸ் தீவு, துருக்கியைச் சேர்ந்ததே; ஏனெனில், அந்தத் தீவினை துருக்கி நெடுங் காலம் ஆண்டிருக்கிறது" என்று, துருக்கிய குடியரசுத் தலைவர் செலல்பேயர், கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினராம்!

இந்தியாவுக்கு பெட்ரோல்

பம்பாய், அக். 16—

ருமேனியா இந்தியாவுக்கு செய்தித்தாள், சிமெண்டு, கீராவிப் படகுகள், இயந்திரம், எண்ணெய் எடுக்கும் கருவிகள் ஆகியவைகளை ஏற்றுமதி செய்கிறது.

ருமேனியா தன் தேவைக்கு இரண்டு மடங்காக பெட்ரோல் உற்பத்திச் செய்கிறதாம்; இந்த உபரி அளவை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யுமாம்!

மாநிலங்களின் அபிவிருத்தித் திட்டங்கள்

திட்டக் குழுவின் தாக்கீது

புதுடில்லி, அக். 15—

1957—58-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் மாநிலங்கள் அபிவிருத்தித் திட்டங்களுக்காக எவ்வளவு தொகை செலவிட்டனரோ அவ்வளவு தொகைக்குள்ளேயே 1958—59-ம் ஆண்டு திட்டங்களுக்கும் செலவிடவேண்டும் என்றும், அதற்குமேல் திட்டங்களுக்காகத் தொகை ஒதுக்கக்கூடாது என்றும், திட்டக்குழு, மாநில சர்க்கார்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறதாம்!

ஆனல், இதேபோல மத்திய சர்க்கார் இலாகாக்களுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில், அந்த இலாகாவினர் திட்டங்களுக்கு இவ்வளவுதான் செலவிடவேண்டும் என்று வரையறை விதிக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

கிருஷ்ணமாச்சாரி

'பதவியிலிருந்து விலக வேண்டும்'

கம்யூனிஸ்டுகள் கோரிக்கை

புதுடில்லி, அக். 14—

'மத்திய நிதிமந்திரி டி.டி. கிருஷ்ணமாச்சாரி, பதவியிலிருந்து விலகவேண்டும்' என்று கோரி, இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டி தீர்மானம் ஒன்று நிறைவேற்றியிருப்பதாகத் தெரிகிறது.

மத்திய சர்க்காரின் பிரகடனப் படுத்தப்பட்ட கொள்கைகளுக்கு விரோதமாக நிதிமந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி, 'நியூயார்க் டைம்ஸ்' இதழுக்கு ஒரு பேட்டி அளிக்கும்போது கருத்துக்களைத் தெரிவித்திருப்பதாகவும் அந்தக் குழுவினர் கூறியிருப்பதாகத் தெரியவருகிறது.

வாழ்க்கைச் செலவுப் புள்ளி

சென்னை, அக். 14—

1957-செப்டம்பர் மாதத்தில் சென்னை நகரில் தொழிலாளர் வாழ்க்கைச் செலவுப் புள்ளி 370-ஆகும்.

தாம்பரம்—விழுப்புரம் இடையே

மின்சார இரயில்

மத்திய இரயில்வே மந்திரி தரும் உறுதி மொழி!

சென்னை, அக். 15—

"தென் பிராந்திய இரயில்வேயில், தாம்பரம்-விழுப்புரம் இரயில் பாதையை மின்சார இரயில் பாதையாக்கும் திட்டம் கைவிடப்படும் என்ரோ, ஒத்தி வைக்கப்படும் என்ரோ எவரும் அஞ்சத் தேவை இல்லை" என்று, மத்திய இரயில்வே மந்திரி-செகசீவன்ராம், தென் பிராந்திய வர்த்தகச் சழகத்தினரிடம் பேசுகையில் உறுதிமொழி தந்திருக்கிருராம்!

டி.டி.கே. வீராப்பு

லண்டன், அக். 15—

"அன்னிய நாட்டவர் உதவி ஏதும் கிடைக்காவிட்டாலும், நாங்கள், இரண்டாம் திட்டத்தை முடித்தே தீருவோம்" என்று நிதிமந்திரி டி.டி. கிருஷ்ணமாச்சாரியார் இங்கு வீராப்புப் பேசியிருக்கிருர்!

கைதான சோஷலிஸ்டுகளுக்கு

விடுதலை பெற்றுத் தர!

லோகியா கைதாவாராம்!

அலகாபாத், அக். 15—

வரும் நவம்பர் முதல் தேதிக்குள் கைது செய்யப்பட்ட சோஷலிஸ்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் விடுதலை செய்யப்படாவிட்டால், அன்றுமுதல் தான் சத்தியாக்கிரகத்தில் ஈடுபடப்போவதாக சோஷலிஸ்டுத் தலைவர் டாக்டர் லோகியா தெரிவித்திருக்கிருராம்!

பம்பாயில் ரேயான் தொழிற்சாலை

30 இலட்சம் டாலர் கடன் தருகிறது அமெரிக்கப் பாங்கி

நியூயார்க், அக். 14—

பம்பாயில் ரேயான் தொழிற்சாலை நிறுவுவதற்காக அமெரிக்கப் பாங்கி ஒன்று, 30 இலட்சம் டாலர் வரை கடன் தரச் சம்மதித்திருக்கிறதாம்!

ஏழாண்டுகளுக்குப் பிறகு, தவணைகளில் இந்தக் கடனைத் திருப்பித் தரலாம் என்றும், இதனல் டெல்லி சர்க்காருக்கு ஆண்டு தோறும் ரூ. 50 லட்சம் அன்னியச் செலாவணியில் மிச்சப்படும் என்றும் கூறப்படுகிறது.

ஆரம்பப் பள்ளிகளுக்கான

பாடப் புத்தகம்

ஆந்திர சர்க்காரே அச்சிட்டு வெளியிடும்

ஐதராபாத், அக். 15—

வரும் பள்ளி ஆண்டு முதல், துவக்கப் பள்ளிகளுக்கான பாடப் புத்தகங்களை சர்க்காரே வெளியிடும் என்றும், அவற்றை அச்சு அடிக்கும் வேலை சர்க்கார் அச்சகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் ஆந்திர சர்க்கார் தகவல் தந்திருக்கின்றனர்.

புத்தகங்களை அச்சிடுகிற வேலையைக் கூட சர்க்காரே மேற்கொள்வதற்குக் காரணம், தனிப்பட்ட அச்சகங்களிடம் போதுமான சாதனங்கள் இல்லை என்பதால், குறித்த காலத்தில் புத்தகங்கள் கிடைக்காமற்போகும் என்பதுடன், அவற்றிற்கு ஆகும் செலவும் அதிகமாக இருக்கும் என்பதுதான் என்றும் சர்க்கார் தெரிவித்திருக்கிறது.

உழைக்காமல் கிடைத்த வருமானம்

திருமலை, அக். 16—

திருமலை ஏழுமலையானுக்கு செப்டம்பர் திங்களில் ரூ. 1,90,337 இந்திய நாணயங்களும், ரூ. 67—2—0 ஹாலி (ஐதாராபாத்) நாணயங்களும்; ரூ. 222—8—0 தோலா எடைத் தங்கம், ரூ. 1,750 தோலா எடை வெள்ளி, 603 எட்வர்டு வெள்ளி ரூபாய்கள், 17 சவரன்களும் வருமானமாகக் கிடைத்துள்ளனவாம்.

கலகம் வெடித்த முதுகுளத்தூர் வட்டம்

சமுதாய நலத் திட்டப் பிரதேசமாகும்

உத்தேச ஏற்பாடுகள் பற்றி மந்திரி

சென்னை, அக். 16—

இராமநாதபுரம் மாவட்டத்தில் கலகங்களுக்கு இரையான முதுகுளத்தூர் வட்ட மக்களுக்கு நிவாரணம் தரும் பொருட்டு சர்க்கார், அந்தப் பிரதேசத்தில் பல சிறு தொழில்களைத் துவங்க உத்தேசித்திருப்பதாக மந்திரி பக்தவத்சலம் தெரிவித்திருக்கிருர்.

ஏற்கனவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகட்டிக்கொள்வதற்கும், கிராமங்களில் திரும்பக் குடியேறுவதற்குமாக வசதிகளைச் செய்து தந்திருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கிருர்.

அத்துடன், முதுகுளத்தூர் வட்டம் முழுவதையும் சமுதாய நலத் திட்டப் பிரதேசமாக்கும் நோக்குடன் திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும், இதற்கு இரண்டு தேசீய விஸ்தரிப்புத் திட்ட 'பிளாக்கு'களை உருவாக்கவும் மத்திய சர்க்கார் சம்மதித்துவிட்டதாகவும் மந்திரி தெரிவித்துள்ளார்.

இந்த முதுகுளத்தூர் வட்ட மக்களுக்குப் புதுவாழ்வு தருவதற்கான திட்டங்களுக்கு மத்திய சர்க்கார் நிதிஉதவி அளிக்கவும் தயாராக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

'தன்மானப் போரில் உயிரையும் துறப்போம்'

'தருக்கர்தம் ஆணவத்தை முறிப்போம்'

இந்தித் திணிப்புக்கு எதிராகத் தமிழகம் திரண்டெழுந்த காட்சி

நாடெங்கும் அக். 13— எதிர்ப்பு நாள்: விவரங்கள்

தி. மு. கழகப் பொதுச்செயலாளர்விடுத்த அறிக்கைக்கிணங்க நாடெங்கும் 13—10—57 அன்று 'இந்தி எதிர்ப்பு' நாள் மிகச் சிறப்பானமுறையில் கொண்டாடப்பட்டிருக்கிறது.

ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் நடத்தி, இந்தி எதிர்ப்புத் தீர்மானங்கள் நிறைவேற்றியும், சுவரொட்டிகள், துண்டறிக்கைகள், விளம்பரத்தட்டிகள் மூலமும் இந்தித் திணிப்புக்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுமையிலுமுள்ள—பேரூர், சிற்றூர் தி. மு. கழகக் கிளைகளும், கழகச் சார்புடைய அமைப்புகளும், பிற பொது நிறுவனங்களும் பங்கெடுத்துக்கொண்டு, இந்தியை எதிர்த்துத் தங்களின் ஒருமித்த கருத்தினைத் தெரிவித்திருக்கின்றன; அவற்றின் விவரம் இங்கு சுருக்கமாகத் தரப்படுகிறது:—

சென்னையில்:

2-வது வட்டம்:

காலை 9 மணியளவில் இந்தி எதிர்ப்பு ஊர்வலம் தோழர் என். சீவரத்தினம் தலைமையில் புறப்பட்டு முக்கிய தெருக்கள் வழியாக வலம் வந்தது; ஊர்வலத்தில் சுமார் 400-க்கு மேற்பட்ட கழகத் தோழர்களும், அனுதாபிகளும் கலந்து கொண்டதுடன், மற்றும் துணை மன்றங்களான சிங்காரவேலர் பகுத்தறிவு மன்றம், நெடுஞ்செழியன் பகுத்தறிவு மன்றம், திராவிட நற்பணி மன்றம், மக்கள் முன்னேற்ற மன்றம் ஆகியவைகளும் பங்கேற்றன. கழகக் கொடிகளுடனும், இந்தி எதிர்ப்பு வாசகங்கள் அடங்கிய தட்டிகளுடனும், சென்ற ஊர்வலம் இறுதியில் மக்கள் முன்னேற்ற மன்றத்தில் முடிவடைந்தது; அங்கு தோழர் வி. டி. அரசு அவர்களால் தீர்மானங்கள் வாசிக்கப்பெற்று, குழுமியிருந்த மக்களால் ஏகமனதாக கை ஒலிகள் மூலம் நிறைவேற்றப்பட்டன. இறுதியில் தோழர் என். சீவரத்தினம் சிறிதுநேரம் உரையாற்றிய பின் ஊர்வலம் கலைந்தது.

3-வது வட்டம்:

தி. மு. கழகச் சார்பில் இந்தித் திணிப்பு கண்டன துண்டு அறிக்கை வெளியிட்டும், துணை அமைப்புகளின் ஆதரவுடன், வட்டம் முழுமையும் தோரணங்கள் கட்டியும், இளைஞர் முன்னேற்ற மன்றத்தோடு இணைந்து மூவேந்தர்களின் வேடமிட்ட தோழர்கள் இரதத்தில் செல்ல போர் முரசு ஒலிக்கும் மாபெரும் ஊர்வலம் வட்ட முழுமையும் நடத்தியும், கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியும் சிறப்பான முறையில் இந்தி எதிர்ப்பு நாள் கொண்டாடப்பட்டது.

4-வது வட்டம்:

இளைஞர் முன்னேற்ற மன்றத்தின் சார்பில் காலை 10 மணிக்கு, மன்ற உறுப்பினர்கள் ஆர். இராசகோபால், வி. எ. குமார், எம். செபஸ்டியான் ஆகியோர் முறையே சேர—சோழ—பாண்டியர்கள் வேடமணிந்து அலங்கரிக்கப்பட்ட இரதத்தில் தமிழ்க் கொடியேந்தி நின்றுவர, முரசு முழங்க, தாரை ஒலிக்க, குதிரை வீரன் கழகக் கொடி தாங்கி முன் செல்ல, 3, 4-வது வட்டக் கிளைக் கழகங்களும், துணை மன்றங்களும் இந்தி எதிர்ப்பு ஒலி முழங்கிவர, தோழர் கே. எஸ். அருணசலம் தலைமை தாங்கி முன்செல்ல, ஊர்வலம் 3, 4-வது வட்டங்களின் முக்கிய வீதிகளின் வழியாகச் சென்று மன்ற அலுவலகத்தின் முன் வந்தடைந்ததும், இந்தி எதிர்ப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஊர்வலம் கலைக்கப்பட்டு, மீண்டும் 3 மணிக்கு, ஊர்வலம் புறப்பட்டு மூலக்கொத்தளம் கல்லறையிலிருந்து புறப்பட்ட சென்னை மாவட்ட. தி. மு. கழக ஊர்வலத்தில் கலந்துகொண்டது.

20-வது வட்டம்:

காலை 10 மணிக்கு நடைபெற்ற தி. மு. க. செயற்குழுக் கூட்டத்தில் இந்தி எதிர்ப்புத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. பின்னர், கிளைக் கழகத்தின் சார்பிலும், தி. மு. க. மாணவர் கிளை, அறிவு வளர்ச்சி மன்றம், முத்தமிழ் வளர்ச்சி மன்றம், சத்தியவாணிமுத்து பகுத்தறிவு மன்றம், வள்ளுவர் படிப்பகம், வள்ளுவர் மன்றம், மறைமலையடிகள் நூல் நிலையம், திரு. வி. க. மன்றம், இளங்கோ மன்றம், கலை வளர்ச்சி மன்றம் ஆகியவைகளின் சார்பிலும் அச்சிடப்பட்ட துண்டு அறிக்கைகள், மன்றத் தோழர்களாலும், கழகத் தோழர்களாலும் வீடுதோறும் வழங்கப்பட்டன.

24-வது வட்டம்:

காலை 10 மணியளவில் தோழர் நா. கிருஷ்ணன் தலைமையில் நடந்த இந்தி எதிர்ப்புக் கூட்டத்தின்போது இந்தியை எதிர்த்துத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

29-வது வட்டம்:

காலை 10-மணிக்கு மேற்படி வட்ட தி.மு.க. சார்பில் தோழர் அ. பொ. அரசு தலைமையில் இந்தி எதிர்ப்பு ஊர்வலம் நடைபெற்றது; ஊர்வலத்தில் கலைவளர் மன்றமும், வள்ளுவர் மன்றமும் கலந்துகொண்டன; ஊர்வலம் தி. மு. கழகத்தில் முடிவடைந்த பின் ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் முன்னிலையில் இந்தியை எதிர்த்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

31-வது வட்டம்:

தி. மு. கழகச் சார்பில், காலை 10 மணிக்கு எண். 12, நாகப்ப முதலித் தெருவில் செயலாளர் வி. இளஞ்சேரலாதன் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது; இந்தி எதிர்ப்புத் தீர்மானங்களை ஒருமனதாக நிறைவேற்றியவுடன், இந்தி எதிர்ப்பு குறித்து தோழர்கள் செங்குட்டுவன், அந்தோணி மாறன், அழகிரி, அ. வ. பாண்டியன், லோகநாதன், இராங்கதுரை தீனன், இராதா, ஸ்டான்லி, பெண்டிக், கனகராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

* * *

மஜீத் நினைவு நூல் நிலயத்தின் செயற்குழுக் கூட்டம் தோழர் ஜெய்லாப்தீன் தலைமையில் நடந்தது; கூட்டத்தில் இந்திஎதிர்ப்புத் தீர்மானம் நிறைவேறியபின் தோழர்கள் வில்லவன், கனகராசன் ஆகியவர்கள் இந்தித் திணிப்பைக் கண்டித்துப் பேசினர்.

33, 34-வது வட்டம்:

காலை 9 மணியளவில், தி. மு. கழகக் கிளைகள் சார்பில் ஓர் மாபெரும் இந்தி எதிர்ப்பு ஊர்வலம் நடைபெற்றது. தோழர்கள் க. முருகேசனார், வ. சங்கரநாராயணன், இரா. சம்பந்தம் ஆகியோர் தலைமை தாங்கினர். பன்னீர் செல்வம் படிப்பகம், திரு. வி. க. மன்றம், அறிவு வளர்ச்சி மன்றம், குறள் நெறிக் கழகம், தமிழ் மறுமலர்ச்சி மன்றம், மக்கள் மகிழ்ச்சி மன்றம், வள்ளுவர் மன்றம், சிந்தனையாளர் மன்றம், இளைஞர் மறுமலர்ச்சி மன்றம் ஆகியவை ஊர்வலத்தில் கலந்துகொண்டன; ஊர்வலம் 33-வது வட்டக் கிளையினின்று கிளம்பி பன்னீர்செல்வம் படிப்பகத்தில் சுமார் 12-30 மணியளவில் முடிவடைந்தது. தோழர்கள் இரா. சம்பந்தன், சி. ஆர். கோலப்பா, வ. சங்கரநாராயணன், தி. சு. கிள்ளிவளவன், க. முருகேசனார், பழநி ஆகியோர் இந்தியைக் கண்டித்துப் பேசினார்கள். பிறகு இந்தியைக் கண்டித்து மூன்று தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. ஊர்வலத்தில் கலந்துகொண்ட பல மன்றங்களுக்கும், தோழர்களுக்கும் தி. மு. க. சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்ளப்பட்டு பகல் இரண்டு மணியளவில் ஊர்வலம் கலைந்தது.

40-வது வட்டம்:

பகல் 11 மணிக்கு கழகக் கட்டிடத்தில் பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் தலைமையில் இந்தித் திணிப்பு கண்டன நாள் கூட்டம் நடைபெற்றது; இந்தியை எதிர்க்கும் மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

45-வது வட்டம்:

காலை 10 மணிக்கு கழகப் பணிமனையில் தோழர் எஸ். வியோராசனார் தலைமையில் கூட்டம் நடைபெற்றது; இந்தித் திணிப்பைக் கண்டித்துப் பல தோழர்கள் பேசினர்; பிறகு தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

47-வது வட்டம்:

சென்னை-மவுண்ட்ரோடு, ஏரிக்கரை திரு. வி. க. நூல் நிலயச் சார்பில் காலை 7-30 மணிக்கு தோழர் சடகோபன் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் இந்தி எதிர்ப்புத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கொளுல்புரம்:

காலை 8 மணிக்கு கொளுல்புரம் அம்பேத்கார் மன்றம்—கே. வி. கே. சாமி படிப்பகத்தின் சார்பில் திரு.கோ. குசேலர் பே. தா. இன்மொழி தலைமையில் மாபெரும் ஊர்வலம் அழகிரி மன்றத்திலிருந்து புறப்பட்டு 7, 8-வது வட்ட முக்கிய வீதிகளின் வழியாகச் சென்று மூலக்கொத்தளம் தாளமுத்து-நடராசன் கல்லறைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தியது; இந்தி எதிர்ப்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது; தீர்மானத்தை ஆதரித்து, தோழர்கள் கோ. குசேலர், சி. ஆர். பாலசுந்தரம், சிறுவை மோகனசுந்தரம், பே. தா. இன்மொழி, மக்கள் மன்றம், வள்ளுவர் முத்தமிழ் மன்றச் செயலாளர்கள் சொற்பொழிவாற்றினர்.

திருவொற்றியூர்:

தி. மு. க. கிளை, துணை மன்றங்கள், படிப்பகங்கள் சார்பில், காலை 9 மணியளவில் கழகப் பணிமனையிலிருந்து தோழர் என். வி. மதிவண்ணன் அவர்களது தலைமையில் ஒரு மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு, திருவொற்றியூர் முக்கிய வீதிகள் வழியாகச் சென்று சன்னதித் தெரு வந்தடைந்ததும், அங்கு இந்தி கண்டனக் கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் என். வி. மதிவண்ணன், வே. கபிலன், தம்பித்துரை, வை. பார்த்தசாரதி, ஏ. பார்த்தசாரதி, மு. த. இளஞ்சேரன், டி. கே. சண்முகம் ஆகியோர் பேசினர். தலைவரால் கொண்டுவரப்பட்ட இந்தி எதிர்ப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்னை-விருகம்பாக்கம்:

தோழமைக் கழகத்தின் சார்பில் தோழர் ஜெகதீசன் தலைமையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் தோழர்கள் மா. செங்குட்டுவன், தி. சு. கிள்ளிவளவன், சைதை சம்பந்தம், வி. பிதரணி, சா. வில்லவன், மற்றும் பலர் பேசினர். இந்தி எதிர்ப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மணவழகர் மன்றம்:

சென்னை மணவழகர் மன்றத்தின் சார்பில் தோழர் அன்புரோசு தலைமையில் இந்தி எதிர்ப்புக் கூட்டம் கூடியது, தோழர்கள் சிறுவை - மோகனசுந்தரம், சி. சம்பந்தம், சிட்டிபாபு ஆகியவர்கள் இந்தித் திணிப்பைக் கண்டித்துப் பேசினர்; இந்தி எதிர்ப்புத் தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

மன்றச் சார்பில் நடந்த காலை ஊர்வலம், தாளமுத்து-நடராசன் கல்லறையில் முடிவுற்றது.

திமிரி:

மாலை 4 மணிக்கு திமிரி தி. மு க. கிளை சார்பில் கழகக் கட்டிடத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டு கோட்டை, நேரு பஜார் வழியாகச் சென்று பொதுக்கூட்ட மேடையை அடைந்தது. மாலை 6-30 மணிக்கு தோழர் இரா. அரங்கராசன் தலைமையில், டி. ஏ. கண்ணப்பா, அ. ப. நடராசன் ஆகியோர் பேசினர். கூட்ட முடிவில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அனகாபுத்தூர்:

மாலை 4 மணிக்கு தி. மு. கழகக் கட்டிடத்திலிருந்து மாபெரும் ஊர்வலம் திரு. அச்சுதானந்த சாமிகள் தலைமையில் புறப்பட்டு ஊர் முழுவதும் இந்தி எதிர்ப்பு ஒலி முழக்கம் செய்துகொண்டு சென்று இறுதியில் தீர்மானம் நிறைவேற்றியது.

பிறகு ஊர்வலத்தினர் குன்றத்தூர் இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் கலந்துகொள்ள மூன்று மைல் தூரம் செல்கையில் இடையிலுள்ள கிராமங்களான கலைமாநகர், ஆண்டாள் குப்பம், மஞ்சேரி ஆகிய ஊர்களிலும் இந்தி எதிர்ப்பு ஒலிகளை முழங்கிக்கொண்டு குன்றத்தூரில் நடந்த ஊர்வலத்திலும் சுவாமி அருணகிரிநாதர் தலைமையில் நடந்த கூட்டத்திலும் பங்கு கொண்டு, இரவு 10 மணிக்கு ஊர் திரும்பினார்கள்.

ஏ. கொளத்தூர்:

மாலை 5 மணிக்கு சீதேவி கிராமச் சாவடியிலிருந்து மாபெரும் ஊர்வலம் தோழர் இரா. நாராயணசாமி தலைமையில் புறப்பட்டு சீதேவி, சிக்காடு, ஏ. கொளத்தூர் முதலிய கிராமங்கள் வழியாகச் சென்று ஏ. கொளத்தூர் அவ்வை இலக்கிய மன்றத்திற்கு எதிரில் வந்தடைந்தது. அங்கு மன்றத் தலைவர் திருவேங்கடம் தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் இரா. நாராயணசாமி, இல. இராமதாசு ஆகியோர் பேசினர். பின்னர், இந்தி எதிர்ப்புத் தீர்மானங்கள் நிறைவேறின.

காஞ்சீபுரம்:

கங்கைகொண்டான் மண்டபத்தருகில் மாலை 6 மணிக்கு தோழர் மா. கி. தசரதன் தலைமையில் பொதுக்கூட்டம் துவங்கியது. தோழர் இரா. வெங்கடேசன் கண்டனத் தீர்மானத்தை முன்மொழிய, தோழர் டி. சீனுவாசன் வழிமொழிய தீர்மானம் மக்களின் ஏகோபித்த கையொலிக்கிடையே நிறைவேறியது.

தோழர் இரா. செழியன் அவர்கள், இந்தியைக் கட்டாயமாகத் திணிப்பதை எதிர்த்துப் பேசினார்.

மாலை 4 மணிக்கு 'திராவிட நாடு' அலுவலகத்திலிருந்து புறப்பட்ட ஊர்வலத்தில் ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டு தங்களுடைய முழு எதிர்ப்பை இந்தி திணிப்புக்குத் தெரிவித்துக் கொண்டனர்.

பண்ணுருட்டி:

தோழர் பி. ஜானகிராமன் (1—1—49-ல் சிறை சென்றவர்) தலைமையில் ஓர் மாபெரும் ஊர்வலம் தண்டபாணி டாக்கீஸ் திடலிலிருந்து இந்தி எதிர்ப்பு ஒலி முழக்கம் செய்துகொண்டு நகரின் முக்கிய வீதிகள் வழியாக சாந்தி திடலை அடைந்தது. அங்கு தோழர் ச. இராமச்சந்திரன் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர்கள் வெ. கிருஷ்ணமூர்த்தி, ந. இராசகோபால், பி. ஜானகிராமன், எஸ். அண்ணாமலை, க. கோவிந்தன், கே.முகுந்தராமானுஜம், த. இராமச்சந்திரன், இளங்கோமணி ஆகியோர் இந்தித் திணிப்பைக் கண்டித்து பேசியபின், நகர செயலாளர் நா. இராசகோபால் அவர்களால் இந்தி எதிர்ப்புத் தீர்மானம் படிக்கப்பட்டு பொது மக்களின் கையொலிகளுக்கிடையே நிறைவேற்றப்பட்டது.

செங்கற்பட்டு:

தோழர் செ. த. செயராமன் தலைமையில் ஒரு மாபெரும் ஊர்வலம் மணிக்கூண்டிலிருந்து புறப்பட்டு முக்கிய வீதிகள் வழியாகச் சென்று தர்க்கா திடலை அடைந்தது; மாலை 6 மணிக்கு தோழர் செ. எ. பலராமன் தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது; அதுபோது தோழர்கள் சோ. கா. சுந்தரேசன், செ. பா. வேணு ஆகியோர் பேசிய பின், தோழர் என். சீவரத்தினம் அவர்கள், இந்தி வந்தால் என்னென்ன கேடுகள் விளையும் என்பதை விளக்கி பேசியபின் இந்தி எதிர்ப்புத் தீர்மானம் மக்களின் பேராதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

இந்தித் திணிப்புக்கு மகளிர் மன்ற எதிர்ப்பு

கண்டனக் கூட்டத்தில் தோழியர்கள் குரல்

12—10—57 மாலை 6 மணிக்கு, மகளிர் மன்ற அலுவலகத்தில் இந்தி எதிர்ப்புக் கூட்டம் டாக்டர் சத்தியவாணிமுத்து எம். எல். ஏ., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

டெல்லி ஏகாதிபத்தியம் ஆதிபத்திய வெறிகொண்டு வஞ்சகமாக இந்தியைத் தென்னாட்டவர் மீது திணிப்பதை மிக வன்மையாகக் கண்டித்தும், திருவண்ணாமலை மாநாட்டில் அண்ணா அவர்கள் விடுத்த அழைப்பை ஏற்று தாய்மார்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தீவிரமாக பங்குகொள்ளுவதென்றும் தோழியர்கள் வெற்றிச் செல்வி-அன்பழகன், ஜெகஜ்ஜோதி-நாகராஜன், பெ. கலைச் செல்வி, திரிபுரசுந்தரி, சகுந்தலா, சாவித்திரியம்மாள், சுசிலா ஆகியோர் பேசினர்.

இந்தியைக் கண்டித்து, தலைமை நிலைய அறிக்கைப்படி தீர்மானங்கள் நிறைவேறின.

பொதுச்செயலாளர் முழக்கம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

சாபி—இந்த நான்கு மொழி பேசுகின்ற மக்களின் மொத்த எண்ணிக்கை 14, 99, 44, 311 பேர்! கிட்டத்தட்ட 15 கோடி மக்கள் இந்தி மட்டும் அல்ல—இந்த நான்கு மொழிகளையும் பேசுகிறவர்கள்.

"இந்த நான்கு மொழி தவிர்த்த மற்றைய மொழி பேசுகின்ற மக்களின் எண்ணிக்கை 20, 69, 37, 083 பேர்! கிட்டத்தட்ட 21 கோடி மக்கள் இந்த நான்கு மொழி அல்லாத மற்றைய மொழிகளைப் பேசுகிறார்கள்.

"இந்த நான்கு மொழிகளை மட்டும் எடுத்துக்கொண்டு பார்த்தால் 5-லே 2-பகுதியினர் ஆகிறார்கள். ஐந்தில் 3 பகுதியினர் இந்தி அல்லாத மொழிகளைப் பேசுகிறார்கள். இந்த ஐந்தில் 2 பகுதியினரும் முழுவதிலும் இந்தி பேசுகிறவர்கள் அல்லர்; நான்கு மொழிகள் பேசுகிறவர்கள்.

"இந்த நான்கிலும் இந்தியை மட்டும் எத்தனைப் பேர் பேசுகிறார்கள் என்று பார்த்தால் கிட்டத்தட்ட 11 கோடி மக்கள், இந்தி என்ற பிரிவின் கீழே வருகிறார்கள். இந்தி என்றால், இப்பொழுது நம்மிடையே புகுத்துகிறார்களே அந்த இந்தி பேசுகிற மக்களா 11 கோடி பேர் என்று கேட்டால்அல்ல! அந்த 11 கோடி மக்களும் எத்தனை மொழி பேசுகிறார்கள் என்று பார்த்தால்—இந்தியிலுள்ள உட்பிரிவுகள், பந்தேரி—கன்னோஜி—பிரஜ் பாஷா—பிங்காரு—காரிபோலி — அவதி — அகேலி—தாட்டிஸ்காரி — மைதிலி — போஜ்புரி—மகதி இந்த 11 வகை இந்திகளைப் பேசுகிறார்கள்; இவர்கள் 11 கோடி மக்கள். இன்றைக்கு எந்த இந்தியை இந்தியாவின் ஆட்சி மொழியாக—போது மொழியாகப் புகுத்துகிறார்கள் என்றால், இந்த 'காரிபோலி' என்ற இந்தியைத்தான் போதுமொழியென்றும், ஆட்சி மொழியென்றும் புகுத்துகின்றார்கள்.

"இன்றைக்குத் தமிழுக்கும்—தெலுங்குக்கும், தமிழுக்கும்—கன்னடத்துக்கும், தமிழுக்கும்—மலையாளத்துக்கும் எவ்வளவு வேறுபாடு காணுகிறீர்கள்; இந்த நான்கும் திராவிடக் குழு மொழி என்றால்—திராவிடக்குழு மொழி பேசும் நான்கு மொழியினரையும் கணக்கிட்டுப் பார்த்தால் ஏறத்தாழ எட்டே முக்கால் கோடி மக்கள் வருகிறார்கள்.

"இந்த 11 மொழி பேசுகிற மக்களைக் கணக்கிட்டுப் பார்த்தால் 11 கோடி பேர் வருகின்றார்கள்; திராவிடக் குழு மொழி என்று சொல்வது மாதிரி இந்திக் குழு மொழி என்று சொல்ல வேண்டுமே தவிர, இந்தி என்பது ஒரு தனி மொழியல்ல. தமிழுக்கும் மற்ற திராவிட மொழிகளுக்கும் எவ்வளவு வேறுபாடு காணுகிறீர்களோ, அவ்வளவு வேறுபாடு இந்த கன்னோஜுக்கும் காரிபோலிக்கும்! ஆனால் அவர்கள் அத்தனைப் பேரும் தேவநாகிரி லிபியில் ஒரு வரி வடிவில் எழுதுகின்ற காரணத்தாலே, நம்மவர்கள் கருதிக்கொண்டிருக்கிறார்கள்—அத்தனையும் ஒன்றுதான் என்று!

"இந்தப் புத்தகத்திலே எழுதிய குழுவினர் சொல்லியிருக்கிறார்கள் — 'எல்லா வகையிலும் சிறப்புடையது ஆங்கிலம்; ஆங்கிலத்திற்கு இருக்கிற தகுதியின்மை அன்னிய மொழி; இந்தியில் எதுவும் இல்லை; இந்திக்கு இருக்கும் ஒரே தகுதி இந்த நாட்டைச் சேர்ந்தது என்பதுதான்'—என்று!

"இந்த ஒரே தகுதி என்பது கூடத் தவறு! இந்தி என்ற சொல்லே அரபிச் சொல்! இந்தியாவைச்சேர்ந்தது என்று அரபியில் அர்த்தமாம்! அதுவும் ஒரு மொழியேகூட அல்ல; அது பல்வேறு மொழிகளைச் சேர்த்துக் கணக்கிடுகின்ற மொழியாக இருக்கும். இந்தி என்ற சொல்லே அரபிச் சொல்!"

நிகழ்ச்சி

இக்கூட்டம், மேற்படி கல்லூரி ஆண்டர்சன் மண்டபத்தில் மாணவத் தோழர் இ. ஆறுமுகம் தலைமையில் நடந்தது.

பொதுச் செயலாளரை வரவேற்று திரு. க. வடிவேலன் பேசினார்.

மாணவத் தோழர் மு. ச. இராமகிருட்டினன் கூட்ட இறுதியில் நன்றி கூறினார்.

இந்தி எதிர்ப்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'அப்படிப் போ' என்று முழக்கமிட்டதில்லை.

அவர்கள், பச்சையப்பன் கல்லூரி அருகே வந்தடைந்தனர். இந்தித் திணிப்பைக் கண்டித்துப் பல மாணவர்கள் பேசினர்; பிறகு அமைதியாகக் கலைந்து சென்றனர்.

இந்தக் கல்லூரியில் மொத்தம் சுமார் 700 மாணவர்கள் இருக்கின்றனர்; அவர்களில் 550 பேர்களுக்குமேல் கல்லூரிக்குச் செல்லவில்லை என்று தெரிகிறது. (ந-தி.)

பண்ருட்டியில்

பண்ருட்டி சாட்டாம்பிள்ளைக் கழக உயர்நிலைப் பள்ளி மாணவர்கள், இந்தித் திணிப்பை எதிர்த்து பள்ளிக்குச் செல்லவில்லை. அவர்கள் ஊர்வலமாக முக்கிய வீதிகளின் வழியே சென்று இந்தித் திணிப்பைக் கண்டிக்கும் தீர்மானங்களை நிறைவேற்றிவிட்டு அமைதியாகக் கலைந்தனர். (ந-தி)

ஆங்கிலத்திற்குப் பதில்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அவர்கள் கூறுவதாவது :—

"ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்த நேரத்தில் இந்தியை ஆட்சிமொழியாகவும், உயர் தரக் கல்வி போதனமொழியாகவும் ஆக்குவது, இந்தியாவின் சிறந்த நலன்களுக்கு மிகுந்த ஊறுதேடுவதாகும் என்று நாங்கள் கருதுகிறோம்.

"ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்தியைப் புகுத்துவதினால் இந்தி பேசாத மக்கள்தான் அதிகமான கஷ்டங்களுக்கு ஆளாவர்; எனவே, இந்தி பேசாத மக்கள்தான், ஆங்கிலத்திற்குப் பதில் இந்தியை வைத்துக்கொள்ளலாமா, கூடாதா என்பதையும், ஆங்கிலத்திற்குப் பதில் இந்தியை வைத்துக்கொள்ளலாம் என்றால் எப்போது-எப்படி என்பதையும்முடிவு செய்யவேண்டும்.

"மக்கள் சபையின் பெரும்பான்மை வாக்குபலத்தால் இந்தியைத் திணிப்பதைவிட, இதுபோன்ற சிநேக பாவத்துடன் விட்டுக் கொடுக்கும் மனோபாவம் தான், தேசிய ஐக்கியத்திற்காக இன்று தேவைப்படுகிறது."



'மனிதனின் குடும்பம்'

உத்திரவாதமான சரக்குகள்

'தீபாவளி விற்பனைகள்'

எல்லாநகரங்களிலும், பட்டினங்களிலும் விற்பனை நிலையங்களில் கிடைக்கும்.

சென்னை இராஜ்ய
கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிமிடெட்
'பாலசுந்தரம் கட்டிடம்', சென்னை-8.

தென்னாட்டில் தொழிற்சாலை கதவடைப்புகள்

திண்டுக்கல், அக். 16—

சடந்த அக். 13, 15-ந் தேதிகளில் தொழிலாளர்கள் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்ததை ஒட்டி, உள்ளூர் சௌந்தராஜா ஆலை நிர்வாகிகள் இன்று காலை முதல் ஆலையை மூடிவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

தொழிலாளர்கள் இந்திய தேசியத் தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்கள் ஆறு மாத போனஸ் கோரியும் ஆலையை உடனே திறக்கக் கோரியும் மாலையில் ஆர்ப்பாட்டம் நடத்தினர் என்றும் தெரியவருகிறது.

எர்ணாகுளத்தில் :

எர்ணாகுளம், அக். 16—

1956—57-ம் ஆண்டுக்கான போனஸ் விஷயத்தில் ஏற்பட்ட தகராறு காரணமாக நடந்த அக்டோபர் 7-ந் தேதியிலிருந்து சுமார் 1,100 தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதை ஒட்டி, பெரம்பாவூரில் உள்ள திருவாங்கூர் ரேயான் ஆலை நிர்வாகிகள் ஆலையை நேற்று மாலை முதல் மூடிவிட்டதாகக் கூறப்படுகிறது.

இதனால் தினம் உற்பத்தியாக வேண்டிய 12 டன் ரேயான் நூல் உற்பத்தி பாதிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

நாஞ்சில் மாவட்ட

தி.மு.கழகக் கிளைத் தோழர்கட்கு :

18—10—57 வெள்ளியன்று மாலை 6 மணிக்கு நாஞ்சில் மாவட்ட மாநாட்டு வரவேற்புக் குழுக் கூட்டம் கழக அலுவலகத்தில் நடைபெறும். அதுபோது, வரவேற்புக் குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வருகை தர வேண்டுவதோடு, செலுத்தவேண்டிய கட்டணத் தொகை ரூ. 5 இன்னும் செலுத்தாமல் இருக்கும் தோழர்கள் அன்றைக்கு சிரமம் பாராமல் கொண்டுவரக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அன்றையக் கூட்டத்தில் ஆய்வுக்கு வரும் விஷயங்கள் :—

1. வரவேற்புக்குழுத் தலைவர், செயலாளர், பொருளாளர் தேர்வு.
2. மாநாட்டுத் தலைவர், திறப்பாளர் நிர்ணயித்தல்.
3. இதர விஷயங்கள்.

அன்பன்,
கி. மனோகரன்
செயலாளர்
நா. மா. தி. மு. கழகம்

தஞ்சை மாவட்ட

தி. மு. க. செயற்குழுக் கூட்டம்

"20—10—57 காலை 11மணியளவில், வேதாரண்யம் கீழ வீதி தி. மு. க. அலுவலகத்தில், தஞ்சை மாவட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அவ்வமயம், தஞ்சை மாவட்ட மூன்றாவது மாநாடு கூட்ட இடமும், காலமும் நிர்ணயிக்கப்படுவதுடன் வரவேற்புக் குழுவும் அமைக்கப்படும். உறுப்பினர்கள் வந்திருந்து ஆய்வுரைகள் வழங்கி, கூட்டத்தைச் சிறப்பிக்க வேண்டுகிறேன்"

என, தஞ்சை மாவட்டத் தி. மு. க. செயலாளர் தோழர் என்.எஸ். இளங்கோ அறிவிக்கிறார்.

கழகக் கூட்டம்

திருவத்திபுரம் :
காந்தி ஆசிரமத்திற்கு எதிரில்
19—10—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : கே. கோவிந்தன்
பேசுவோர் :
இரா. செழியன்
காஞ்சி. கல்யாணசுந்தரம்

அண்ணா

சுற்றுப்பயணம்

அக்.
20 : காஞ்சிபுரம்—கலைக்கழகம்
21 : கீழ் எழாச்சூர்
22 : திரளூர்
25 : கொருக்குப்பேட்டை
26 : சென்னை—மயிலாப்பூர்
27 : நாகப்பட்டினம்
29 : சென்னை—புரசவாக்கம்
30 : கோடம்பாக்கம்
நவ.
1 : கூடுவாஞ்சேரி

விழுப்புரம் நகர வாக்காளர்களுக்கு :

"விழுப்புரம் நகர எல்லைக்குள் இருக்கும் தி. மு. க. தோழர்களும், பொதுமக்களும், தங்கள் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்படாமலிருந்தாலும், விடுபட்டிருந்தாலும உடனடியாக விழுப்புரம் தாசில்தாரிடம் கிடைக்கும் விண்ணப்பத்தாளில், தங்கள் பெயரை வாக்காளராகப் பதிவுசெய்துகொள்ள வேண்டுகிறேன். அக்டோபர் 21-ந்தேதியே இறுதி நாளாக இருப்பதால் மேற்படி தேதிக்குள் பதிவு செய்துகொள்ள வேண்டுகிறேன்"

என்று, விழுப்புரம் நகர தி. மு. க. துணைச்செயலாளர் தோழர் வி. பெ. சங்கரன் கேட்டுக் கொள்கிறார்.

காஞ்சீபுரம் கலைக் கழகம்

துவக்க விழா சிறப்புச் சொற்பொழிவு

20—10—57 காலை 9½ மணிக்கு காஞ்சி—கண்ணன் கொட்டகையில்

தலைவர் :
அண்ணா
சொற்பொழிவாளர் :
புரட்சி நடிகர்
எம். ஜி. ராமச்சந்திரன்
அன்பளிப்பு: ரூ. 1, அணா 8.

சென்னை ஸ்டேட் பாங்க் ஊழியர் சம்மேளனப் பொதுக்கூட்டம்

இரா. நெடுஞ்செழியன் கலந்து கொள்கிறார்

18—10—57 மாலை 6-மணிக்கு சென்னை—கோகலே மண்டபத்தில், மேற்படிக் கூட்டம் நடைபெறும். தோழர் ஆர்.வி. கிருஷ்ணமூர்த்தி தலைமை வகிப்பார். தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், மற்றும் தோழர்கள் மோகன் குமாரமங்கலம், வி. ஜி. ராவ், ஆர். இராமநாதன், ஜி. உமாபதி, தோழியர் எஸ். விஜயலட்சுமி ஆகியோர் பேசுவர்; மாலை 4-மணிக்கு ஊர்வலம் உண்டு.

திருத்தம்

நேற்று (16—10—57) 'நம் நாடு' இதழில், இரண்டாம் பக்கத்தில் வெளிவந்துள்ள பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் சேலம் சொற்பொழிவின் மூன்றாவது தலைப்பில் 'சமத்தினார்கள்' என்றிருப்பதற்கு மாறாக, 'சுமத்துகிறார்கள்' என்று திருத்தி வாசித்துக் கொள்ள வேண்டுகிறோம்.

—(ஆ-ர்)

தியாகராயர் மன்றத் திறப்புவிழா

19—10—57 மாலை 6-மணிக்கு சென்னை, சூளை வாத்தியார் கந்தப்பிள்ளைத் தெருவில், தோழர் சு. நல்லதம்பி தலைமையில் நடைபெறும். தோழர்கள் க. அன்பழகன் எம்.எல்.ஏ., ஆர். ஜார்ஜ், பி. எம். கருணாகரன், மு. மாசிலாமணி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.